பொது சுற்றறிக்கை இல : 02/130/2014

எனது இல :

சுகாதார அமைச்சு

"சுவசிரிபாய"

385,வண. புத்தேகம விமலவங்ஷ தேரோ மாவத்தை.

கொழும்பு – 10

2014.08.18

மாகாண சுகாதார பணிப்பாளர்கள்,

பிராந்திய சுகாதார பணிப்பாளர்கள்

நிறுவனத் தலைவர்கள்

## விஷேட வைத்திய அலுவலர்களின் மேலதிக நியமனங்களுக்கான வழிகாட்டுகை

1991,05.17 ஆம் திகதிய 662/22 ஆம் இலக்க வர்த்தமானியின் மருத்துவ சேவை பிராமணக்குறிப்பு பிரிவு 10.2 இல் விஷேட வைத்திய அலுவலர்களின் மேலதிக நியமனத்திற்காக பொது வழிகாட்டுகை விபரிக்கப்பட்டுள்ளது. பின்வரும் விதிமுறைகள் 2014.08.01 இலிருந்து சகல மேலதிக நியமனங்களின் இடமாற்றங்கள் தொடர்பாகவும் செயற்படும் என்பதுடன் அதனை கட்டாயமாக கடைப்பிடிக்கவும் வேண்டும்.

**விஷேட வைத்திய அலுவலர்களின் மேலதிக நியமனங்கள் :-**

கணவனும் மனைவியும் விஷேட வைத்தியர்களாக இருந்து மிகவும் அருகில உரிய இடங்களில் பணியாற்ற விரும்பினால், கணவன் அல்லது மனைவியின் சிரேஷ்ட நிலையின் அடிப்படையில் இடமாற்றங்கள் தீர்மானிக்கப்படுகின்ற பின்னர் மாற்றமுடியாத தெரிவு ஒன்றினை அவர்கள் மேற்கொள்ளவேண்டும். ஏவ்வாறாயினும் கணவன் / மனைவி சிரேஷ்ட நிலை தொடர்பில் அவர்களுக்கு உரித்தில்லாத பதவி ஒன்றினை வகிப்பதற்கு உரித்துடையவர்கள் ஆக மாட்டார்கள். பதவியிலிடுதல் பின்வரும் விதிமுறைகளை கவனத்தில்கொண்டு மேற்கொள்ளப்படும்.

1. மேலதிக பதவிகள் என்பது சேவை தேவைப்பாடுகளுக்கமைய வழங்கப்படும்.
2. கொடுகக்ப்பட்ட ஒரு ஆண்டினுள் அனுமதிக்கப்படவேண்டிய பதவிகளின் எண்ணிக்கை சேவைத்தேவைப்பாடுகளுகேற்ப மட்டுப்படுத்தப்படும்.

3. விண்ணப்பிப்பதற்கான தகைமை :- வருடாந்த இடமாற்றத்தினூடாக பெறப்பட்ட நிரந்தரப்பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 2 வருடங்களைப் பூர்த்தி செய்திருத்தல்.
4. மேலதிக பதவி ஒன்றிற்கான விண்ணப்பதாரி ஒருவர் வருடாந்த பட்டியல் ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும்.
5. வுாழக்கைத்துணை பணிபுரியும் அதே மாவட்டம் /அதே மாகாணத்தில் மேலதிக பதவிகள் இருந்தால் வருடாந்த பட்டியல் பதவி ஒன்றிற்காக விண்ணப்பிக்க வேண்டியது மேலதிக நியமன பதவி விண்ணப்பதாரிகளுக்கு கட்டாயமானதாகும். விண்ணப்பதாரியின் வாழ்க்கைத்துணை பணியாற்றும் அதே மாவட்டம் / மாகாணத்தில் மேலதிக பதவி ஒன்றிற்கான அவர் கருதப்படுகின்ற வஐடாந்த பட்டியல் பதவி ஒன்றைப் பெறுவதற்கு முடியாத நிலையில் மாத்திரம் இந்நிலைமை காணப்படுகின்றது.
6. மேலதிக பதவிகள், வாழ்க்கைத்துணை பணிபுரியும் வைத்தியசாலைக்கு சமீபமாக சார்ந்துள்ள அதே மாவட்டம்/ மாகாணத்தின் ஒரு நிறுவனத்திற்கு வழங்கப்படும்.எனினும மேலதிக பதவிகள் போதனா வைத்தியசாலைகளுக்கு வழங்கப்படமாட்டாது.
7. மேலதிக பதவி நியமனத்தின் வருடாந்த இடமாற்ற பட்டியலூடாக நியமிக்கப்படும். விஷேட வைத்தியர் ஒருவராக அதே பணியில் பணியாற்றுவதற்கு உரித்துடையவராக மாட்டார். ஏனெனில் அது ஏற்கனவே இருக்கின்ற பதவியணிக்காக உருவாக்கப்பட்ட ஒரு மேலதிக பதவியாகும். ஏன்பதுடன் தங்கியிருந்து பணியாற்றும் விஷேட வைத்திய நிபுணர் ஒருவரின் நிலையில் பணிகளை ஏற்றுக் கொள்ளவும் வேண்டும்.மற்றும் தேவைப்படும்போது அதே மாவட்டம்/ மாகாணத்தில் உள்ள ஏனைய வைத்தியசாலைகளின் கடமைகளையும் ஆற்றுதல் வேண்டும்.
8. மேலதிகப்பதவிகள், ஒருவரின் சேவைக்காலத்தில் ஒரு தடவை மாத்திரம் வழங்கப்படும். ( ஆகக்கூடியதாக 04 வருடங்கள் வரை ) அதன்பின் இடமாற்றங்கள் வழமையான வருடாந்த பட்டியல் / இறுதிப் பதவிகள் முறைக்கமைய இடம்பெறும்.
9. மேலதிகப் பதவி நியமனத்தர் 02 வருடங்களின் பின்னர் மாத்திரம் இடமாற்றம் செய்யப்படப்பாலதான பதவிகளுக்கு விண்ணப்பிக்க முடியும். எனினும் அவர் எந்நேரத்திலும் இறுதிப்பதவியின் பொருட்டு விண்ணப்பிக்க முடியும். இடமாற்றப்படக்கூடிய அல்லது இறுதிப்பதவிக்கு அலுவலர் ஒருவர் விருப்பம் தெரிவித்த பின்னர் ( 4 வருடங்கள் பூர்த்தி செய்யப்படாமல் ) அவர் மேலதிக நியமனப் பதவிக்கு திரும்பியும் மாற்றிக்கொள்ள முடியாது.
10. மேலதிக நியமனப் பதவி ஒன்றை வகிப்பவரின் வாழ்க்கைத்துணை விவாகரத்து பெற்றிருந்தால் அல்லது இறந்திருந்தால் அவர் அடுத்த வருடாந்த இடமாற்றப்பட்டியருக்கு திரும்பவும் மாற்றுதல் வேண்டும்.

டாக்டர் பீ. ஜி. மஹிபால.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்.